# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1955 - 2016 පෙබරවාරි මස 19 වැනි සිකුරාදා - 2016.02.19

*1955 ஆம் இலக்கம் – 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 260 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 266 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, மாச்சு மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

*(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

*(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.*

*(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

*(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.*

*(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

*(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

*(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

*(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

*(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.*

*(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

*(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

*(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## அரச சேவை ஆணைக்குழு

கல்வி அமைச்சு

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

***சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்றுச் சேவை வகுதி தரம் III) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல் - 2015***

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்காக பின்வரும் தகைமைகள் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்க்கும் முறை**.- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழுவொன்று நடாத்தும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின்படி மிகக்கூடிய புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரர் வெற்றிடத்திற்கு ஆட்சேர்க்கப்படுவார். அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (இலக்கம் 6 இன்கீழ்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கு அமைவாகக் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

2. **தேவையான தகைமைகள் :**

(i) ***கல்வி/ தொழில் தகைமைகள்***.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் சட்டம் தொடர்பாகப் பட்டம் பெற்றிருத்தல் அல்லது உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகச் சத்தியப் பிரமாணம் செய்திருத்தல் ;

(ii) ***அனுபவம்***.- உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராகச் சத்தியப்பிரமாணம் செய்ததன் பின்னர் 3 வருடங்களுக்குக் குறையாத உயிர்ப்புள்ள தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் ;

(iii) ***உடற்தகைமைகள்***.- ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்த ஒரு பிரதேசத்திலும் சேவையாற்றவும் பதவியின் கடமைகளை நிறைவேற்றவும் போதிய உடல் மற்றும் உளப் பொருத்தமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(iv) ***ஏனையவை :***

* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பதாரிகள் மிகச் சிறந்த நடத்தையைக் கொண்டிருத்தல் வேண்டும் ;
* 2016.03.17 ஆந் திகதியன்று பதவிக்கு ஆட்சேர்ப்பதற்குத் தேவையான தகைமைகளை எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

3. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானது ; ஓய்வூதியம் உடையது. விதவைகள்/ தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதிய நிதிக்கு உதவித் தொகையை வழங்க வேண்டும் ;

(ii) இந்நியமனம் 3 ஆண்டுகால தகுதிகாண் காலத்திற்கு உட்படும். பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டு 3 ஆண்டு காலத்தினுள் ஆட்சேர்க்கும் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் ;

(iii) 2014.01.21 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை 01/2014 இன் ஏற்பாடுகள் மற்றும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றுநிருபங்களின் ஏற்பாடுகளுக்கமைய இப்பதவியைப் பொறுப்பேற்ற திகதியிலிருந்து ஐந்தாண்டுகள் கடப்பதற்கு முன்பதாக, உரிய முறையில் அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொண்டதாக உங்களால் உறுதிசெய்யப்படல் வேண்டும் ;

(iv) இந்நியமனம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தொழிற்பாட்டுத் திட்டத்தின் விதிகள் மற்றும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்குரிய ஆட்சேர்ப்பதற்கான திட்டத்திற்கு ஏற்கனவே செய்துள்ளதும், எதிர்காலத்தில் செய்கின்றதுமான, திருத்தங்கள் மற்றும் ஏற்பாடுகளுக்கு உட்படும்.

4. **வயதெல்லை**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது 21 வருடங்களுக்குக் குறையாமலும் 45 வருடங்களுக்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பளத் திட்டம்**.- இப்பதவிக்கு 22,935 ரூபா - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - 53,555 ரூபா மாதாந்த சம்பளத் திட்டம் உரித்தாகும். (2006.04.25 ஆந் திகதிய அ.நி.சு. இலக்கம் 6/2006 இன் எஸ். எல். 1 - 2006 சம்பளப் பிரிவு)

6. கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்காகப் பின்வரும் புள்ளித்திட்டம் அடிப்படையாகக் கொள்ளப்படும் :

| தொடர் இலக்கம் | விடயம் | | கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | மேலதிகக் கல்வித் தகைமைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகத்திலிருந்து பெற்ற சட்டம் தொடர்பான பட்டம் | | 20 |
| | - முதலாம் வகுப்பு சித்தியொன்றுக்காக | 20 | |
| | - இரண்டாம் வகுப்பு மேல் சித்தியொன்றுக்காக | 15 | |
| | - இரண்டாம் வகுப்பு கீழ் சித்தியொன்றுக்காக | 10 | |
| | சட்டக் கல்லூரி இறுதி ஆண்டில் முதலாம் வகுப்புச் சித்தியொன்றுக்காக | 15 | |
| | சட்டக் கல்லூரி இறுதி ஆண்டில் இரண்டாம் வகுப்புச் சித்தியொன்றுக்காக | 10 | |
| | **குறிப்பு**.- விசேட சித்தியொன்றுடன் இறுதிப் பரீட்சையில் சித்தி அடைந்தால் மாத்திரம் 10 புள்ளிகள் வழங்கப்படும். (ஆகக்கூடிய தகைமைக்காக மாத்திரம் புள்ளி வழங்கப்படும் - பட்டம் அல்லது சட்டக் கல்லூரி தகைமைகளில் ஒன்றுக்காக மாத்திரம்) | | |

| தொடர் இலக்கம் | விடயம் | | கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 2 | மேலதிகத் தொழில் தகைமைகள்<br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் உரிய துறை பற்றிய ஒரு வருடத்திற்குக் குறையாத பட்டப்பின் டிப்ளோமா பாடநெறியொன்று அல்லது பட்டப்பின் சட்ட டிப்ளோமா பாடநெறியொன்றுக்காக (ஒரு டிப்ளோமாவிற்கு 5 புள்ளிகள் வீதம்)<br><br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் உரிய துறை பற்றிய ஆறு மாதத்திற்குக் குறையாத டிப்ளோமா பாடநெறியொன்றுக்காக (ஒரு டிப்ளோமாவிற்கு 3 புள்ளிகள் வீதம்)<br><br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் உரிய துறை பற்றிய 3 மாத காலத்திற்குக் குறையாத சான்றிதழ் பாடநெறியொன்றுக்காக (ஒரு பாடநெறிக்காக 2 புள்ளிகள் வீதம்) | | 15 |
| 3 | மேலதிக அனுபவம் :<br>சட்டத்தரணியொருவராக அரச சேவையில் அல்லது தனியார் துறையில் அனுபவம் :<br>- 6 மாதங்களுக்குக் கூடியதும் ஒரு வருடத்திற்குக் குறைவானதும் - 2 புள்ளிகள்<br>- ஒரு வருடத்திற்கு ஐந்து புள்ளிகள் வீதம் ஆகக்கூடியது 30 புள்ளிகள்<br><br>(அடிப்படைத் தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவைப்படும் சட்டத்தரணியொருவராகச் செயற்பட்ட 3 ஆண்டு கால சேவைக்காலம் தவிர.)<br>(20 வருட காலத்திற்குக் குறையாத சேவைக்காலத்தைப் பூரணப்படுத்தியுள்ள சட்டத்தரணி ஒருவரின் அல்லது சனாதிபதி சட்டத்தரணி ஒருவரின் அல்லது நீதிபதி ஒருவரிடமிருந்து பெற்ற சான்றிதழ் ஒன்றின் மூலம் மேலதிக அனுபவத்தை உறுதி செய்தல் வேண்டும்.) | | 30 |
| 4 | ஆங்கில மொழிப் புலமை<br>ஆங்கில மொழி மூலம் கற்றுள்ள பட்டப்பின் பட்டம்/பட்டம்/பட்டப்பின் சட்டமாணிப் பட்டம்/சட்டமாணிப் பட்டம்<br>(உரிய பரீட்சையின் வினாத் தாள்கள் யாவற்றுக்கும் ஆங்கில மொழி மூலம் விடையளித்திருத்தல் வேண்டும்.) | 15 | 15 |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் ஆங்கில மொழி பற்றிய டிப்ளோமாப் பாடநெறியொன்றுக்காக<br>(1 வருடம் அல்லது 1,500 மணித்தியாலங்கள்) | 10 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது நிறுவனமொன்றில் ஆங்கில மொழி பற்றிய சான்றிதழ் பாடநெறியொன்றுக்காக :<br>- 6 மாதங்கள்/720 மணித்தியாலங்கள்<br>- 3 மாதங்கள்/360 மணித்தியாலங்கள் | <br><br>7<br>5 | |
| 5 | தகவல் தொழில்நுட்பம் பற்றிய அறிவு | | 15 |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற பல்கலைக்கழக பட்டமொன்றுக்காக தகவல் தொழில்நுட்பத்தை பிரதான பாடமொன்றாக கற்றிருப்பதற்காக | 15 | |
| | அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் 1 வருடத்திற்குக் குறையாத தகவல் தொழில்நுட்பம் பற்றிய டிப்ளோமா பாடநெறியொன்றுக்காக அல்லது 1,500 மணித்தியாலங்களுக்காக | 10 | |
| | அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் பாடநெறியொன்றுக்காக :<br>- 6 மாதங்கள்/720 மணித்தியாலங்கள்<br>- 3 மாதங்கள்/360 மணித்தியாலங்கள் | <br><br>7<br>5 | |
| 6 | நேர்முகப் பரீட்சையின்போது காட்டும் திறமைகள் | | 5 |
| 7 | மொத்தப் புள்ளி | | 100 |

7. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்**.- கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது சகல விதத்திலும் பூரணமான விண்ணப்பப்படிவம் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரமே யாகும்.

நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகள் மற்றும் தக்கவாறு உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது தனது ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காகப் பின்வரும் அடையாள அட்டைகள் ஏற்றுக்கொள்ளப் படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய விதம்** :

(i) விண்ணப்பப்படிவம் 2016.03.17 ஆந் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்பதாக பின்வரும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும் :

செயலாளர்,
கல்வி அமைச்சு,
"இசுறுபாய", பத்தரமுல்ல.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப் படிவமொன்று இந்த அறிவித்தலின் முடிவில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் அவர்களது விண்ணப்பப்படிவத்தை ஏ4 அளவான தாளில் தயாரித்து முதற்பக்கத்தில் இலக்கம் 1 முதல் இலக்கம் 5 வரையும், 2 ஆம் பக்கத்தில் இலக்கம் 6-8 வரையும் இருக்குமாறு தயாரித்துக்கொண்டு தமது கையெழுத்தினால் நிரப்புதல் வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் உறையின் இடது மேல் மூலையில் "சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பப்படிவம்" எனக் குறிப்பிட வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப் பத்தை ஒரு அரசாங்கப் பாடசாலை அதிபர்/ ஒரு சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/ பிரிவின் கிராம உத்தியோகத்தர்/முப்படையைச் சேர்ந்த பதவி நிலையிலுள்ள அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்/ பொலிஸ் சேவையைச் சேர்ந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியிலுள்ள உத்தியோகத்தர்/ 22,935 ரூபா அல்லது அதற்குக்கூடிய திரட்டிய மாதச் சம்பளம் பெறுகின்ற அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுப்படுத்தல் வேண்டும்.

(v) தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பப்படிவத்தை தாம் சேவையாற்றும் திணைக்களத்தின் திணைக்களத் தலைவர் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(vi) இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் மாதிரிக்கேற்ப தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் காணாமற்போதல் அல்லது தாமதமாதல் தொடர்பாக எந்த ஒரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9. **போலியான தகவல்கள் வழங்குதல்**.- உங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள யாதாயினும் தகவலொன்று பொய்யானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்பதற்கு முன்பாக கண்டறியப்படுமாயின் உங்களது விண்ணப்பிக்கும் தகைமை இரத்துச் செய்யப்படும். அவ்வாறான பொய்யான அல்லது தவறான தகவலொன்று ஆட்சேர்த்ததன் பின்னர் கண்டறியப்படுமாயின் அதற்கான நடவடிக்கைகளுக்கு உட்படும் வகையில் சேவையில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுறுபாய",
பத்தரமுல்ல.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

*நிறைவேற்றுத் தர சேவை வகுதியைச் சேர்ந்த சட்ட உத்தியோகத்தர் தரம் III இற்கு ஆட்சேர்த்தல் - 2015*

**Executive Service Category-Structured Interview for Recruitment to the Post of Legal Officer Grade III - 2015**

(தரப்பட்ட கட்டத்தினுள் சரியான குறியீட்டையும் எண்ணையும் தெளிவாகக் குறிக்க.)

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு)

கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
[ ]
(உரிய இலக்கத்தை கட்டத்தில் எழுதுக.)

1. 1.1 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA)

1.2 கடைசியாக வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்களைப் பின்னருமாக பெயரை (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) எழுதவும் :----.
(உதா : GUNAWARDANA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (தமிழில் அல்லது சிங்களத்தில்) :----.

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 நிரந்தர முகவரி (தமிழில் அல்லது சிங்களத்தில்) :----.

2.3 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. 3.1 பால் :
(ஆண்-0, பெண்-1) ☐
(உரிய இலக்கத்தை கட்டத்தில் எழுதுக.)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3 2016.03.17 ஆந் திகதிக்கு வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

3.4 தொலைபேசி இலக்கம் :

☐☐☐☐☐☐☐☐☐☐

4. **கல்வித் தகைமைகள்.**- பட்டம்/ உச்ச நீதிமன்றத்தில் சட்டத் தரணியாக சத்தியப்பிரமாணம் செய்வதற்குரித்தான கல்விச் சான்றிதழ் தொடர்பான விவரங்கள் மற்றும் வழங்கப்பட்ட திகதி :----.

(i) பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம் :----.
(ii) பட்டத்தின்/கல்விச் சான்றிதழின் பெயர் :----.
(iii) பட்டம்/கல்விச் சான்றிதழ் வழங்கப்பட்ட திகதி :----.
(iv) வகுப்பு :----.

5. சட்டத்துறையில் பெற்றுள்ள அனுபவம் :-----------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------

6. வேறு கல்வி மற்றும் தொழில் தகைமைகள் :----------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------

7. நீங்கள் எப்போதாவது எந்த ஒரு குற்றம் தொடர்பாகவும் நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ? :----.
ஆம் எனின், விபரங்கள் தருக :----------------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------

ஆம் ☐ இல்லை ☐

(உரிய கட்டத்தில் ✓ அடையாளமிடுக.)

8. **பரீட்சார்த்தியின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்தவரையில் உண்மையானதும் சரியானதும் என கௌரவபூர்வமாக அறியத்தருகின்றேன். இங்கு யாதாயினும் ஒரு பகுதியை நிரப்பாமையால் மற்றும்/ அல்லது பிழையாக நிரப்பியமையால் ஏற்படுகின்ற நட்டங்களை ஏற்றுக்கொள்ள நான் இணங்குகின்றேன். மேலும் இங்கு சகல பகுதிகளிலும் பிழையின்றி நிரப்பப்பட்டுள்ளதெனவும் நான் அறியத்தருகின்றேன்.

(ஆ) என்னால் தரப்பட்டுள்ள யாதாயினும் தகவல் பொய்யானதென நிரூபிக்கப்பட்டால், நியமனம் கிடைப்பதற்கு முன்னராயின் தகைமை இழந்தவனாவேன் எனவும் நியமனம் கிடைத்த பின்னராயின் சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு உள்ளாவேன் எனவும் நான் அறிவேன்.

(இ) மேலும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை நடத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு நான் உட்படுவேன் எனவும் அறியத்தருகின்றேன்.

(ஈ) இங்கு தரப்பட்டுள்ள எந்த ஒரு தகவலையும் நான் பின்னர் மாற்ற மாட்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

9. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தைச் உறுதிப்படுத்தல் :**
இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ....... ........................................ நான் தனிப்பட்ட முறையில் அறிந்தவரும் எனக்குத் தெரிந்தவரும் ஆவார். அவர் எனது முன்னிலையில் ...... .............................. ஆந் திகதி அவரது கையொப்பத்தை வைத்தார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் எனவும், அந்தப் பற்றுச்சீட்டை இங்கு ஒட்டியுள்ளார் எனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தைச் உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி இலச்சினை மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.)

10. **நிறுவனத் தலைவரின் சான்றிதழ்** (அரச/மாகாண அரச/அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமானது) :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ........................................................... இவ்வமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ............................................... ஆக சேவையில் ஈடுபடும் அதே சமயம், அவரது விண்ணப்பத்தை விதந்துரைத்து சமர்ப்பிக்கின்றேன். மேற்படி பதவிக்காக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், இந்நிறுவன சேவையிலிருந்து அவரை விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் முடியும்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி இலச்சினை மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.)

## பாதுகாப்பு அமைச்சு

### பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்த நிறுவனமொன்றுக்கு ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி II இற்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்த்தல் - 2016

பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்த நிறுவனமொன்றுக்கு ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி II இல் காணப்படும் 5 வெற்றிடங்களுக்கு இந்த அறிவித்தலில் காணப்படும் தகைமையைப் பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை.**- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தகைமையைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவால் நடாத்தப்படும் வாய்மொழி மூலமான பெறுபேறுகளின் அடிப்படையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் இணைத்துக்கொள்ளப்பட உள்ளனர். இங்கு அரச சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக (இல. 6 ஐப் பார்க்கவும்.) புள்ளிகள் வழங்கப்படவுள்ளன.

2. **தேவையான தகைமைகள் :**

(i) ***கல்வி/தொழில் தகைமைகள்.***- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட விசேட பட்டம் ;

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சாதாரண பட்டத்துடன் முதுமாணிப் பட்டம் அல்லது பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பட்டம்.

(ii) ***அனுபவம்.***- இணைந்த சேவை அல்லது அபிவிருத்திச் சேவை உத்தியோகத்தர் பதவியில் 5 வருடங்களுக்கு குறையாத திறமையான சேவைக்காலத்தைக் கொண்ட ஆராய்ச்சித் துறையில் அனுபவமுள்ள உத்தியோகத்தராக இருத்தல் (அனுபவம் பற்றிய காலம், திகதி போன்ற விபரங்கள் உறுதிப்படுத்தப்பட்டு இறப்பர் முத்திரை இடப்பட்டு நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்).

(iii) ***உடல் தகைமை.***- அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எப்பாகத்திலும் சேவை செய்யக்கூடிய உடல் மற்றும் உளநிலைத் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) ***ஏனைய தகைமைகள் :***

* இலங்கைப் பிரசையாக இருத்தல் ;
* விண்ணப்பதாரிகள் சிறந்த நற்பண்புள்ளவராக இருத்தல் ;
* விண்ணப்பம் கோரப்பட்டுள்ள இறுதித் தினத்தன்று அனைத்து விண்ணப்பதாரிகளும் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்திருக்க வேண்டும்.

3. **சேவை நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியக் கொடுப்பனவிற்கு மற்றும் விதவை/ அநாதை ஓய்வூதியக் கொடுப்பனவிற்கும் உட்பட்டது ;

(ii) இணைத்துக்கொள்ளப்பட்டு 3 வருட காலத்திற்குள் முதலாவது தகுதிகாண் பரீட்சையில் சித்திபெற வேண்டும் ;

(iii) 2014.01.21 ஆந் திகதிய 01/ 2014 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கு அமைவாக சேவையில் இணைந்து 5 வருடத்திற்குள் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட மொழிக்கு மேலதிகமாக அடுத்த அரச கரும மொழியிலும் தேர்ச்சி பெற்றிருப்பதோடு அரச கரும மொழிகள் அன்றி ஏனைய மொழிகளில் இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் 3 வருட காலத்திற்குள் குறிப்பிட்ட அரச கரும மொழியில் தேர்ச்சி பெற வேண்டும் ;

(iii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சட்டதிட்டங்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிறுவனக் கோவை, அரச நிதிப்பிரமாணங்களுக்கும் மற்றும் அரச திணைக்களங்களின் கட்டளைகளுக்கும் இப்பதவி உட்பட்டது.

4. **சம்பள அளவுத்திட்டம்.**- இப்பதவி 17,680 ரூபா - 10 x 320 - 11 x 365 - 15 x 450 - 31,645 ரூபா மாதாந்த ஊதியத்தைக் கொண்டது.

2006.04.25 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றுநிருப இல. 06/2006MN-6-2006 ஊதிய முறைமை).

5. **நேர்முகப் பரீட்சை பின்வரும் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டது :**

| புள்ளிகள் வழங்கப் படும் துறைகள்/ தலைப்புக்கள் | உச்ச புள்ளிகள் | தகைமை பெறும் புள்ளி மட்டங்கள் |
|---|---|---|
| சேவை அனுபவம் | 35 | தேவையற்றது |
| மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | |
| தொழில் அனுபவம் | 20 | |
| மொழி அறிவு | 10 | |
| கணினி அறிவு | 10 | |
| நேர்முகப் பரீட்சையில் காட்டப்படும் திறமைகள் | 05 | |
| மொத்தம் | 100 | |

6. **விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல்கள் :**

* விண்ணப்பங்களை முழுமையாகப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரிகளே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.
* நேர்முகப் பரீட்சையின்போது அனைத்துச் சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகள் அல்லது சரியான முறையில் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
* விண்ணப்பதாரிகள் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் நோக்கமாக நேர்முகப் பரீட்சையின்போது பின்வரும் ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

7. **விண்ணப்பிக்கும் முறை :**

(i) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத் தபாலில் 2016.03.18 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியவாறு "செயலாளர், பாதுகாப்பு அமைச்சு, இல. 15/ 5, பாலதக்ச மாவத்தை, கொழும்பு 3" எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப்படிவம் இங்கு இணைக்கப் பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் ஏ4 அளவுள்ள கடதாசியைப் பயன்படுத்தி முதல் பக்கத்தில் இல. 1 முதல் 4.3 வரையிலும் ஏனையவைகளை இரண்டாம் பக்கத்திலும் உள்ளடக்கும் வகையில் தமது கையெழுத்தில் விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

(iii) கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி II மட்டுப்படுத்தப்பட்டது" என தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

(iv) தற்போது அரச சேவை மற்றும் மாகாண சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட நிறுவனத் தலைவரின் ஊடாக விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்பட வேண்டும்.

(v) முழுமையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் ஏற்படும் காலதாமதங்கள், காணாமல் போதல் பற்றி கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

8. **பொய்யான தகவல்கள் வழங்குதல் தொடர்பான தண்டனை கள்.**- விண்ணப்பதாரி ஒருவர் இப்பதவிக்குத் தோற்றத் தகுதியற்றவர் என இப்பரீட்சைக்குத் தோற்ற முன்னரோ அதற்குப் பின்னரோ அல்லது வேறு ஏதாவது சந்தர்ப்பத்திலோ தகவல்கள் கிடைக்கப்பெற்றால் அவரின் விண்ணப்பப்படிவம் இரத்துச் செய்யப் படும். விண்ணப்ப தாரியால் வழங்கப்பட்ட தகவல்கள் பொய்யானவை என்றோ அல்லது வேண்டும் என்றோ உண்மையான தகவல்கள் மறைக்கப்பட்டுள்ளது எனத் தெரியவந்தால் அவர் குறிப்பிட்ட பதவிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்னரும் அரச சேவையிலிருந்து நீக்கப்படுவர்.

9. வெற்றிடங்கள் பூர்த்தி செய்தல் அல்லது பூர்த்திசெய்யாமல் இருத்தல் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குரிய அதிகாரமாகும்.

செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,
கொழும்பு 3,
2016, பெப்புருவரி 5.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்த நிறுவனமொன்றுக்கு ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி II இற்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு - 2016**

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

1. 1.1 முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத் துக்களில்) :----.
Mr./Mrs./Miss. :----.

1.2 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.3 முழுப் பெயர் (தமிழில்) :----.

2. 2.1 நிரந்தர முகவரி :----.

2.2 அலுவலக முகவரி :----.

2.3 தொலைபேசி இலக்கம் :
நிரந்தர :----.
கையடக்கத் தொலைபேசி :----.

3. 3.1 தேசிய இனம் :
(சிங்களவர்-1, தமிழர்-2, முஸ்லிம்கள்-3, ஏனைய-4)

3.2 பால் :

| ஆண் | | பெண் | |
|---|---|---|---|

3.3 சிவில் அந்தஸ்த்து :

| திருமணமானவர் | | திருமணமாகாதவர் | |
|---|---|---|---|

3.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

3.5 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

4. 4.1 கல்வித் தகைமைகள் :

| | சாதாரண/ விசேட பட்டம் | முதுமாணி/ டிப்ளோமா |
|---|---|---|
| பட்டம் | | |
| பல்கலைக்கழகம் | | |
| பட்டம் பெற்றுக் கொண்ட திகதி | | |

4.2 ஏனைய கல்வித் தகைமைகள் :----.

4.3 தொழில் தகைமைகள் :

| தற்போதைய பதவி | சேவை செய்த நிறுவனம் | ஆராய்ச்சித் துறையில் சேவைக்காலம் |
|---|---|---|
| | | |

4.4 மொழித் தேர்ச்சி.- பெற்றுக்கொண்ட உயர் பெறுபேறு :
(1) சிங்களம் :----.
(2) தமிழ் :----.
(3) ஆங்கிலம் :----.

4.5 சேவை அனுபவம் :
(1) 2015.12.31 ஆந் திகதியன்று சேவைக்காலம் :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

(2) 2015.12.31 ஆந் திகதிவரை 5 வருட காலத்திற்குள் பெற்றுக் கொள்ளப்பட்ட சம்பளமற்ற விடுமுறைகள் சம்பந்தமான விபரங்கள் :----.

5. மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டியவகையில் உண்மையானதென்றும் சரியானவையென்றும் உறுதிப்படுத்துகிறேன். இங்கே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவை அல்லது பொய்யானவை என நிருபிக்கப்படின் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

6. ***திணைக்களத் தலைவரின் உறுதிப்படுத்தல் :***
இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ........ ........................ என்பவர் திணைக்களத்தில், கூட்டுத்தாபனத்தில், சபையில் சேவையில் உள்ளார் என்றும், 2015.12.31 ஆந் திகதி வரை திருப்திகரமாக 5 வருட சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ளார் எனவும், இக்காலப்பகுதிக்குள் எவ்விதமான தவறுகளுக்காகவும் தண்டனை பெற்றவர் அல்லர் எனவும், அவர் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் அவரைச் சேவையிலிருந்து விடுவிக்க முடியுமெனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
(பதவி முத்திரை)
திகதி :----.

2-584/2

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## பாதுகாப்பு அமைச்சு

### பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்த நிறுவனமொன்றுக்கு ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி II இற்கு ஆட்சேர்த்தல் - 2016

பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்த நிறுவனமொன்றுக்கு ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி II இல் காணப்படும் 15 வெற்றிடங்களுக்கு இந்த அறிவித்தலில் காணப்படும் தகைமையைப் பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. ***ஆட்சேர்ப்பு முறை.***- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தகைமையைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் எனவும், அப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மிகச் சிறந்த புள்ளிகளைப் பெற்றவர்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவால் நடாத்தப்படும் வாய்மொழி மூலமான பெறுபேறுகளின் அடிப்படையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் இணைத்துக்கொள்ளப்பட உள்ளனர். இங்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக (இல. 6 ஐப் பார்க்கவும்.) புள்ளிகள் வழங்கப்படவுள்ளன.

2. ***சம்பள அளவுத்திட்டம்.***- பொ. நி. த. 6/2006 இன்படி சம்பள அளவுத்திட்டம் 17,680 ரூபா - 10 x 320 - 11 x 365 - 15 x 450 - 31,645 ரூபா மாதாந்த ஊதியத்தைக் கொண்டது.

3. இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதியக் கொடுப்பனவிற்கு உட்பட்டதுமாகும்.

4. **தேவையான தகைமைகள் :**

* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 21 வயதிற்குக் குறையாத 35 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பதாரி சிறந்த நற்பண்புடையவராக இருத்தல் வேண்டும் ;

(i) ***கல்வி/ தொழில் தகைமைகள்.***- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில்

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் பெற்றுக்கொள் ளப்பட்ட சாதாரண பட்டத்துடன் முதுமாணிப் பட்டம்.

(ii) ***உடல்நிலைத் தகைமை.***- அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எப்பாகத்திலும் சேவை செய்யக் கூடிய உடல் மற்றும் உளநிலைத் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

***ஏனைய தகைமைகள்.***- விண்ணப்பம் கோரப்பட்டுள்ள இறுதித் தினத்தன்று அனைத்து விண்ணப்ப தாரிகளும் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

5. **சேவை நிபந்தனைகள் :**

(i) இப்பதவியானது 3 வருட கால தகுதிகாண் காலத்தைக் கொண்டது. இணைத்துக்கொள்ளப்பட்டு 3 வருட காலத் திற்குள் ஆட்சேர்ப்புத் திட்டச் சுற்றுநிருபத்திற்கு அமைவாக முதலாவது வினைத்திறன்காண் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் ;

(ii) 2014.01.21 ஆந் திகதிய 01/ 2014 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கு அமைவாக சேவையில் இணைந்து 5 வருடத்திற்குள் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட மொழிக்கு மேலதிகமாக அடுத்த அரச கரும மொழியிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அரச கரும மொழிகள் அன்றி ஏனைய மொழிகளில் இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் 5 வருட காலத்திற்குள் குறிப்பிட்ட அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் ;

(iii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சட்டதிட்டங்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிறுவனக் கோவை, அரச நிதிப்பிரமாணம் மற்றும் அரச திணைக் களங்களின் கட்டளைகளுக்கும் இப்பதவி உட்பட்டது.

6. ***பரீட்சைத் திட்டம்.***- இந்தப் பரீட்சை இரண்டு பகுதிகளைக் கொண்டது. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப் படும். விண்ணப்பிக்கும் மொழி பின்னர் மாற்றப்பட சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

எழுத்துப் பரீட்சைக்குப் பின்வரும் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும் :

| *வினாப்பத்திரம்* | *நேரம்* | *புள்ளிகள்* | *தகைமை பெறும் புள்ளி மட்டம்* |
|---|---|---|---|
| பொது விவேகம் | *1 மணித்தியாலம்* | *100* | *40* |
| குறிப்பிட்ட பதவியுடன் தொடர்புபட்ட அறிவு | *2 மணித்தியாலம்* | *100* | *40* |

*பொது விவேகம்.*- மொழிசார் மற்றும் எண்கள், உருவ வடிவங்கள் தொடர்புகளுடனான சிக்கல்கள் சம்பந்தமான பகுப்பாய்வுத் திறமை, தர்க்க ரீதியிலான விளக்கம், பொருள்கோடல் ஆற்றல், நிலைமைகளுக்கு ஏற்புடையதாக ஆக்கிக்கொள்ளும் ஆற்றல் தொடர்பாக பரீட்சார்த்திக்கு உள்ள புத்திக்கூர்மை மட்டத்தை அளவிடுவது இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது.

*குறிப்பிட்ட பதவியுடன் தொடர்புபட்ட அறிவு.*- இலங்கை மற்றும் உலக சமூக பொருளாதார அரசியல் பின்னணியும் மற்றும் தொழில்நுட்பம், கல்வி, சுகாதாரம், விளையாட்டு, சூழல் மற்றும் கலாச்சாரம் சம்பந்தமாக பரீட்சார்த்தி கொண்டுள்ள திறமைகளை அளவிடுதல்.

**பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபா திருப்பிக் கொடுக்கப்படாத இக்கட்டணத்தை இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்திற்கு கிடைக்கப்பெறும் வகையில் இலங்கை வங்கி, டொரிங்டன் கிளை, இலக்கம் 2323278 எனும் கணக்கிற்கு இலங்கையில் எப்பாகத்திலும் உள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் வைப்பிலிட முடியும். பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்ட இடத்தில் ஒட்டப்பட வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை வைத்திருத்தல் பயன்தரும். எக்காரணம் கொண்டும் காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் முறை :

| *புள்ளிகள் வழங்கப் படும் துறைகள்/தலைப்புக்கள்* | *உச்ச புள்ளிகள்* | *தகைமை பெறும் புள்ளி மட்டங்கள்* |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 15 | 50% |
| குறித்த பதவி சம்பந்தமான தொழில் அனுபவம் | 15 | |
| தொழில் அனுபவம் | 35 | |
| மொழி அறிவு | 15 | |
| கணினி அறிவு | 15 | |
| ஏனைய தகைமைகள் | 05 | |
| மொத்தம் | 100 | |

7. **விண்ணப்பதாரரின் உறுதிப்படுத்தல்கள்** :

* எல்லா வகையிலும் முழுமையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்களே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படுவர்.

* நேர்முகப் பரீட்சையின்போது அனைத்துச் சான்றிதழ் களினதும் மூலப்பிரதிகள் மற்றும் சரியான முறையில் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

* விண்ணப்பதாரிகள் தமது ஆள் அடையாளத்தை உறுதிப் படுத்தும் நோக்கமாக பின்வரும் ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பிக்கும் முறை** :

(i) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத் தபாலில் 2016.03.18 ஆந் திகதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியவாறு "செயலாளர், பாதுகாப்பு அமைச்சு, இல. 15/ 5, பாலதக்ச மாவத்தை, கொழும்பு 3" எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பப்படிவத்தின் மாதிரி இங்கு இணைக்கப்பட் டுள்ளது. விண்ணப்பதாரிகள் ஏ4 அளவுள்ள கடதாசியைப் பயன்படுத்தி முதல் பக்கத்தில் இல. 1 முதல் 26 வரையிலும், இல. 3 இல் இருந்து 5 வரையிலும் இரண்டாம் பக்கத்திலும் ஏனையவைகளை மூன்றாம் பக்கத்திலும் உள்ளடக்கும் வகையில் தமது கையெழுத்தில் விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

(iii) கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி II திறந்த" என தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

(iv) அரச சேவை மற்றும் மாகாண சேவையில் உத்தியோ கத்தர்கள் குறிப்பிட்ட நிறுவனத் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

(v) இங்கே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அல்லாமல் முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப் படும். தபாலில் ஏற்படும் காலதாமதங்கள், காணாமல் போகுதல் பற்றி கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

9. **பொய்யான தகவல்கள் வழங்குதல் தொடர்பான தண்டனைகள்.**- விண்ணப்பதாரர் ஒருவர் இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியற்றவர் என இப்பரீட்சைக்குத் தோற்ற முன்னரோ அதற்குப் பின்னரோ அல்லது வேறு ஏதாவது சந்தர்ப்பத்திலோ தகவல்கள் கிடைக்கப்பெற்றால் அவரின் பரீட்சார்த்த தகைமை இரத்துச் செய்யப்படும். விண்ணப்ப தாரியால் வழங்கப்பட்ட தகவல்கள் பொய்யானவை என்றோ அல்லது வேண்டும் என்றோ உண்மையான தகவல்கள் மறைக்கப்பட்டுள்ளது எனத் தெரியவந்தாலோ அவர் குறிப்பிட்ட பதவிக்குச் சேர்த்துக்கொள் ளப்பட்ட பின்னரும் அரச சேவையிலிருந்து நீக்கப்படுவர்.

10. வெற்றிடங்கள் பூர்த்தி செய்தல் அல்லது பூர்த்தி செய்யாமல் இருத்தல் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குரிய அதிகாரமாகும்.

செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,
கொழும்பு 3,
2016, பெப்புருவரி 5.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்த நிறுவனமொன்றுக்கு ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி II இற்கு ஆட்சேர்ப்பு - 2016**

பரீட்சை சுட்டெண் :----. [ ]
(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி : [ ]
சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4
(குறிப்பிட்ட இலக்கத்தைக் கூட்டினுள் இடுக.)
பரீட்சை மொழி மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது.

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : HERATH MUDIYANSALAGE BUDDHIKA SAMPATH KUMARA GUNAWARDANA)

1.2 முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
Mr./Mrs./Miss. :----.
(GUNAWARDANA H. M. B. S. K.)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில் அல்லது தமிழில்) :----.

1.4 தேசிய இனம் : [ ]
(சிங்களவர்-1, தமிழர்-2, முஸ்லிம்கள்-3, ஏனையோர்-4)

1.5 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

1.6 பால் : [ ]
ஆண்-1, பெண்-2

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில்) :----.
2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில் அல்லது தமிழில்) :----.

2.3 அலுவலக முகவரி (ஆங்கிலத்தில்) :----.

2.4 அலுவலக முகவரி (சிங்களத்தில் அல்லது தமிழில்) :----.

2.5 அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கிலத்தில்) : ----.

2.6 தொலைபேசி இலக்கம் :----.

3. 3.1 திருமணமானவரா ? :-
திருமணமானவர்-1/திருமணமாகாதவர்-2 [ ]

3.2 பிறந்த திகதி :
ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

3.3 2016.03.04 ஆந் திகதியன்று வயது :
வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

4. கல்வி மற்றும் தொழில் தகைமைகள் :

4.1 முதல் பட்டம் :

4.1.1 பட்டம் :----.

4.1.2 உள்வாரி/வெளிவாரி :----.

4.1.3 பாடங்கள் :----.

4.1.4 பட்டம் பெற்ற வருடம் :----.

4.1.5 பல்கலைக்கழகம் :----.

4.2 முதுமாணிப் பட்டம் :

| பட்டம் | பாடங்கள் | நிலை | வருடம் | பல்கலைக் கழகம் |
|---|---|---|---|---|
| | | | | |

4.3 கணினி அறிவு :

| பாடநெறி | காலம் | நிறுவனம் | வருடம் |
|---|---|---|---|
| | | | |

4.4 ஆங்கில மொழி அறிவு (பாடநெறி பற்றிக் குறிப்பிடவும்) : ----.

4.5 குறிப்பிட்ட துறை சம்பந்தமான தொழில் அனுபவம் :

| பாடநெறி | நிறுவனம் | இருந்து | வரை |
|---|---|---|---|
| | | | |

5. சேவை அனுபவம் :

| பதவி நிலை | நிறுவனம் | இருந்து | வரை |
|---|---|---|---|
| | | | |

6. பரீட்சைக் கட்டணம் :

(1) பணம் செலுத்திய இலங்கை வங்கி கிளை :----.
திகதி :----.
(2) செலுத்தப்பட்ட பணம் :----.
(பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும்.)

[ ]

(உறுதிப்படுத்துபவர் முன்னிலையில் கையொப்பம் இடப்பட வேண்டும்.)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டியவகையில் உண்மையானதென்றும் சரியானவையென்றும் உறுதிப்படுத்துகிறேன். இங்கே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவை அல்லது பொய்யானவை என நிரூபிக்கப்படின் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு இங்கே இணைக்கப்பட்டுள்ளது.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

7. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :
இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ........ ....................... என்பவர் இன்றைய தினம் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும், அவர் பரீட்சைக்கான சரியான பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டை இணைத்துள்ளதாகவும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(இறப்பர் முத்திரை)

8. திணைக்களத் தலைவரின் உறுதிப்படுத்தல் :
இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................. என்பவர் ................................ திணைக்களத்தில், கூட்டுத்தாபனத்தில், சபையில் சேவையில் உள்ளார் என்றும், இக்காலப்பகுதிக்குள் எவ்விதமான தவறுகளுக்காகவும் தண்டனை பெற்றவர் அல்லர் எனவும், அவர் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் அவரைச் சேவையிலிருந்து விடுவிக்க முடியுமெனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
(பதவி முத்திரை)
திகதி :----.

2-584/1

---

## சட்டவரைஞர் திணைக்களம்

### சட்டவரைஞர் திணைக்களத்தில் மொழிபெயர்ப்பாளர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை - 2016

சட்டவரைஞர் திணைக்களத்தில் (ஆங்கிலம்/ சிங்களம்) மொழி பெயர்ப்பாளர்கள் பதவிகளிலான 10 வெற்றிடங்களையும் (ஆங்கில/ தமிழ்) மொழி பெயர்ப்பாளர்கள் பதவிகளிலான 11 வெற்றிடங்களையும் நிரப்புவதற்குப் பொருத்தமான ஆட்களைத் தெரிவுசெய்வதற்கான போட்டிப் பரீட்சைக்காக சட்டவரைஞர் திணைக்களத்தின் சார்பில் பரீட்சைகள் ஆணையாளர் தலைமை நாயகத்தினால் தகைமைபெற்ற ஆட்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறி வித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரிப் படிவத்துக்கிணங்க தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், ஒவ்வொரு பதவிக்கும் தனிவேறாக, கீழே குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்புகள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்னும் முகவரிக்குப் பதிவஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும். "சட்டவரைஞர் திணைக்களத்தில் (ஆங்கிலம்/ சிங்களம்) மொழிபெயர்ப்பாளர் பதவிக்கான அல்லது (ஆங்கிலம்/ தமிழ்) மொழிபெயர்ப்பாளர் பதவிகளுக்கான போட்டிப் பரீட்சை - 2016" என்னும் சொற்கள், கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். மேலும், சிங்கள மற்றும் தமிழ் மொழிகளிலான விண்ணப்பங்களில் சிங்கள அல்லது தமிழ் மொழிகளுக்கு மேலதிகமாகப் பரீட்சையின் பெயரானது ஆங்கில மொழியிலும் எழுதப்படுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்களின் முடிவுத் திகதி 2016, மாச்சு மாதம் 21 ஆந் திகதியாகும்.

**குறிப்பு**.- விண்ணப்பமொன்று அல்லது தொடர்புபட்ட ஆவண மொன்று அஞ்சலில் தொலைந்து போனது அல்லது தாமதப்பட்டது என்ற சார்த்துதலின் மீதான முறைப்பாடெதுவும் ஏற்று கவனிக்கப்பட மாட்டாது.

1. **ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறை :**

* ஒரு எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் மீது ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

* எழுத்துப் பரீட்சையில் இரு வினாத்தாள்களிலும் தேறி யுள்ள பரீட்சார்த்திகளிலிருந்து ஆட்சேர்க்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட எண்ணிக்கைக்குச் சமமான அத்தகைய எண்ணிக்கையினரான பரீட்சார்த்திகள், திறமை ஒழுங்கு வரிசையின்படி, இரு வினாத்தாள்களுக்கும் பெறப்பட்ட மொத்தப் புள்ளிகளின் அடிப்படையின் மீது பொது நேர்முகப் பரீட்சையொன்றுக்கு அழைக்கப் படுவர்.

* செய்யப்படவேண்டிய நியமனங்களின் எண்ணிக்கையும் நியமனங்களின் பயனுறு திகதியும் சட்டவரைஞரினால் தீர்மானிக்கப்படும்.

2. **தொழில் நியதிகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானது.

(ii) தெரிவுசெய்யப்பட்ட பரீட் சார்த்திகள், 07/ 2007 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையினதும் ஏனைய இடைநேர்விளைவான சுற்றறிக்கைகளினதும் நியதிகளின் படி நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து ஐந்து (5) ஆண்டுகளினுள் மற்றைய மொழியில் தேர்ச்சி பெறுதல் வேண்டும். அரச கரும மொழியல்லாதவொரு மொழியினூடாகச் சேவையில் சேர்ந்த அலுவலர்கள், நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று (3) ஆண்டுகளினுள் அரச கரும மொழிகளுள் ஒன்றில் மொழித் தேர்ச்சி பெறுதல் வேண்டுமென்பதுடன், நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு (6) ஆண்டுகளினுள் மற்றைய அரச கரும மொழியிலும் தேர்ச்சி பெறுதலும் வேண்டும்.

(iii) இந்நியமனம், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நட வடிக்கை முறைசார் விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை, அரசாங்க நிதிசார் ஒழுங்கு விதிகள் மற்றும் வேறு திணைக்கள ரீதியிலான ஒழுங்கு விதிகள் என்பவற்றுக்கு அமைந்ததாக இருக்கும்.

(iv) நியமனத் திகதியன்று கடமைகளை ஏற்கத் தவறுகின்ற அத்துடன்/ அல்லது மறுக்கின்ற அல்லது அவற்றை ஏற்பதனைத் தவிர்க்கின்ற எவரேனும் பரீட்சார்த்தியின் நியமனம் இரத்துச் செய்யப்படுவதற்கு உட்பட்டதாகும்.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- 06/ 2006 ஆம் இலக்கப் பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி இப்பதவி மாதமொன்றுக்கு (MN 6-2006A) - 17,680 - 10 x 320 - 11 x 365 - 15 x 450 - 31,645 ரூபாவைக் கொண்ட சம்பள அளவுத்திட்டத்தைக் கொண்டுள்ளது.

4. **தகைமைகள் :**

4.1 *கல்விசார் தகைமைகள் :*

(i) பரீட்சார்த்தி ஒவ்வொருவரும்-

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

அல்லது

(ஆ) சட்டத்தரணிகளுக்கான இறுதிப் பரீட்சையில் தேறியிருந்து உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியொருவராக நிரலிற் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ii) கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரப்) பரீட்சையில், ஆங்கில மொழியில் ஒரு திறமைச் சித்தியையும் அல்லது அதிலும் உயர்வான சித்தியையும் அல்லது கல்விப் பொதுத்தராதர (உயர்தரப்) பரீட்சையில் ஆங்கில மொழியில் குறைந்தபட்சம் சாதாரண சித்தியையேனும் அல்லது (நியமிக்கும் அதிகாரியினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட) ஆங்கில மொழியிலான உயர்வான சித்தியையும் கல்விப் பொதுத்தராதர (சாதாரணதரப்) பரீட்சையில் சிங்கள/தமிழ் மொழியில் திறமைச் சித்தியையும் அல்லது ஏதேனும் உயர்வான சித்தியையும் அல்லது கல்விப் பொதுத்தராதர (உயர்தரப்) பரீட்சையில் சிங்கள/தமிழ் மொழியிலான சாதாரண சித்தியையும் அல்லது விண்ணப்பிக்கப்பட்ட பதவி தொடர்பாகச் சிங்கள/ தமிழ் மொழியில் ஏதேனும் உயர்வான சித்தியையும் பெற்றிருத்தல் வேண்டும்.

4.2 ***உடற்தகுதி.***- ஒவ்வொரு பரீட்சார்த்தியும்-

(i) இலங்கையில் எப்பாகத்திலும் பணி புரிவதற்கு,

(ii) தமது பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கு இயன்றவராகவிருப்பதற்கு,
போதிய உடல் மற்றும் உளத் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4.3 ***ஏனைய தகைமைகள் :***

(i) பரீட்சார்த்திகள் இலங்கைப் பிரசைகளாகவிருத்தல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகள் நல்ல ஒழுக்கமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்களின் முடிவுத் திகதியிலுள்ளவாறு, பரீட்சார்த்திகள் பதவிக்கு ஆட்சேர்க்கப்படுவதற்குத் தேவைப்பட்ட எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(iv) பரீட்சார்த்திகள், இலங்கைச் சட்டங்களின்கீழ் ஏதேனும் தவறுக்குக் குற்றவாளியாகக் காணப்பட்டோரல்லாதவர்களாகவிருத்தல் வேண்டும்.

4.4 ***வயதெல்லை :***

(i) கீழ் வயதெல்லை - 21 ஆண்டுகள்.
(ii) மேல் வயதெல்லை - 35 ஆண்டுகள்.

(அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை ஏலவே வகிக்கின்றவர்களுக்கு மேல் வயதெல்லை ஏற்புடையதாகாது).

அதற்கிணங்க எவரேனும் பரீட்சார்த்தி அரசாங்க சேவையில் அல்லது மாகாணப் அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவியை வகிக்காதிருப்பின், குறித்துரைக்கப்பட்ட வயதெல்லையினுள் தாம் அடங்குவதற்கான தகைமையை அவர் பெறுவதற்கு, அவரது பிறந்த நாள் 1995.03.14 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1981.03.14 ஆந் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் அமைதல் வேண்டும்.

5. **பாடவிதானம் :**

5.1 *எழுத்துப் பரீட்சை.*- சட்டவரைஞர் திணைக்களத்தில் (ஆங்கிலம்/ சிங்களம்) மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் (ஆங்கிலம்/ தமிழ்) மொழிபெயர்ப்பாளர்கள் பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்படுவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை பின்வரும் வினாத்தாள்களைக் கொண்டுள்ளது :

(1) மொழிபெயர்ப்பிலான தேர்ச்சி - (நேரம் : 3 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்
(2) மொழித் தேர்ச்சி - (நேரம் : 3 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்

| *வினாத் தாளின் பெயர்* | *பாடவிதானம்* | *சித்திக்கான குறைந்த பட்சப் புள்ளிகள்* |
|---|---|---|
| 1. மொழித் தேர்ச்சி | பாராளுமன்றச் சட்டமொன்றின் ஒரு பகுதியை ஆங்கில மொழியிலிருந்து சிங்கள/தமிழ் மொழிக்கு மொழி பெயர்த்தல்<br><br>ஆங்கில மொழியிலுள்ள சட்டமொன்றின் பிரிவை அதன் பிழையான சிங்கள/தமிழ் மொழிபெயர்ப்புடன் ஒப்பிடுதலும் மற்றும் சொல்லப்பட்ட சிங்கள/தமிழ் மொழிபெயர்ப்பை ஆங்கில உரைக்கிணங்க தகுந்த முறையில் மீளாய்வு செய்தலும் | 40% |
| 2. பாகம் I சிங்கள/ தமிழ் மொழியிலான அறிவு | ஒரு கட்டுரையும் சுருக்கமும் இலக்கணமும் சொற்களின் சரியான பொருளை வெளிக்காட்டும் அத்தகைய முறையில் வசனங்களை அமைத்தலும் | |
| பாகம் II ஆங்கில மொழியிலான அறிவு | ஒரு கட்டுரையும் சுருக்கமும் இலக்கணமும் சொற்களின் சரியான பொருளை வெளிக்காட்டும் அத்தகைய முறையில் வசனங்களை அமைத்தலும் | 40% |

| வினாத் தாளின் பெயர் | பாடவிதானம் | சித்திக்கான குறைந்த பட்சப் புள்ளிகள் |
|---|---|---|
| | இயைபான இரு அரச கரும மொழிகளுள் களுள் ஒன்றுக்கும் (சிங்களம்/ தமிழ்) ஆங்கில மொழி வினாத்தாள்களுக்கும் பரீட்சார்த்திகள் தோற்றுதல் வேண்டும். | |

5.2 ***பொது நேர்முகப் பரீட்சை.***- (புள்ளிகள் எவையும் கொடுக் கப்பட மாட்டாது.) பரீட்சார்த்திகளின் தகைமைகளையும் உடற்றகுதியையும் பரிசோதனை செய்தல்

6. **பரீட்சை நிபந்தனைகள் :**

(i) பரீட்சையானது சிங்களம், தமிழ் மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்தி ஒவ்வொருவரும் ஒரு மொழியைத் தெரிவு செய்தல் வேண்டும். பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும், தெரிவுசெய்யப்பட்ட மொழியில் மொழித் தேர்ச்சியைப் பரீட்சிப்பதற்குத் தயாரிக்கப்பட் டுள்ள வினாத்தாளொன்றுக்கும் ஆங்கில மொழியிலான தேர்ச்சியைப் பரீட்சிப்பதற்கான வினாத்தாளொன்றுக்கும் விடைதருதல் வேண்டும். மொழி பெயர்ப்பில் அவரது தேர்ச்சி யைப் பரீட்சிப்பதற்கு ஆங்கிலத்திலுள்ளவோர் ஆவணத்தின் பகுதியை சிங்களத்துக்கு/ தமிழுக்கு மொழிபெயர்த்தலை இது உள்ளடக்கும்.

(ii) பரீட்சைக் கட்டணம் 750 ரூபாவாகும். பரீட்சைக் கட்டணம், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 என்னும் அரசிறைத் தலைப்பின்கீழ் அரசாங்க அரசிறைக்கு வரவு வைக்கப்படுவதற்குக் காசாக ஏதேனும் அஞ்சலகத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், பரீட்சார்த்தியின் பெயரில் பெறப்பட்ட பற்றுச்சீட்டானது, அது கழராதவாறு விண்ணப்பத்தில் குறிப்பிட்ட இடத்தில் அதன் விளிம்புகளுள் ஒன்று ஒட்டப்படுதலும் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி ஒன்றைப் பரீட்சார்த்தி தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாகும். பரீட்சைக் கட்டணமாகப் பணக் கட்டளை களோ அல்லது முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பரீட்சைக் கட்டணம் எச்சூழ்நிலைகளின் கீழும் மீளளிக்கப்பட மாட்டாது அல்லது வேறு பரீட்சைக்காகக் கைமாற்றப்பட மாட்டாது.

(iii) பரீட்சையானது கொழும்பில் 2016, மே மாதம் நடைபெறும். பரீட்சை பற்றிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(iv) முழுமையாக நிரப்பப்படாத விண்ணப்பங்கள் முன்னறி வித்தலின்றி நிராகரிக்கப்படும்.

**குறிப்பு**.- பிரவேச அட்டையின்றி பரீட்சார்த்தி எவரும் பரீட்சை மண்டபத்தினுள் உட்பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சார்த்தியின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப் பட்டுள்ள பிரவேச அட்டை மட்டுமே பரீட்சை தொடங்கும் நாளன்று பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளருக்குக் காண்பிக்கப்படுதல் வேண்டும்.

எவரேனும் பரீட்சார்த்திக்குப் பிரவேச அட்டையொன்றை வழங்குதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவைப்பட்ட தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்னும் நிகழ்வை ஏற்றுக்கொள்வதாகக் கருதப்படுதலாகாது.

(v) விண்ணப்பமானது, 23 செ. மீ. x 25 செ. மீ. என்னும் அளவிலான ஏ4 தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படுதல் வேண்டும். 1 முதல் 8 வரையிலான தலைப்புக்கள் முதலாம் பக்கத்தில் காட்டப்படுதல் வேண்டும். 9 முதல் 11 வரையிலான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்தில் காட்டப்படுதல் வேண்டும். மற்றும் 12 ஆம் தலைப்பு மூன்றாம் பக்கத்தில் காட்டப் படுதல் வேண்டும். இயைபான விபரங்கள் பரீட்சார்த்தியின் கையெழுத்திலேயே தெளிவாக எழுதப்படுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் ஒத்திராத விண்ணப்பங்களும் முழுமையாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் நிரப்பப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி யொன்றை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.

மேலும், நிரப்பப்பட்ட விண்ணப்பம் இப்பரீட்சை அறிவித்தலில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்திருக் கின்றதாவெனப் பரீட்சார்த்தி செவ்வை பார்த்தல் வேண்டும் என அறிவிக்கப்படுகின்றது. மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்திராத ஏதேனும் விண்ணப்பம் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தைத் தயாரிப்பதற்குத் தேவைப்படுத் தப்படுகின்றனர்.

(vi) அரசாங்க சேவை அல்லது மாகாண அரசாங்க சேவை உறுப்பினர்களாகவுள்ள பரீட்சார்த்திகள் தமது திணைக்களத் தலைவர்களினூடாகத் தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

(vii) பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், அறிவித்தலில் குறித்து ரைக்கப்பட்ட வயதெல்லையிலுள்ளவர்களும் விண்ணப் பங்களின் முடிவுத் திகதியன்று அல்லது அதற்கு முன்னர், பரீட்சைக் கட்டணத்தின் கொடுப்பனவுக்கான எண்பிப்பாக இயைபான பற்றுச்சீட்டுடன் சேர்த்து உரிய முறையில் நிரப்பப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பி யுள்ளவர்களுமான பரீட்சார்த்திகளுக்குப் பிரவேச அட்டைகளை வழங்குவாரென்பதுடன், விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமை ஒப்புகை செய்யப்படவும் மாட்டாது. பரீட்சார்த்திகளுக்குப் பிரவேச அட்டைகள் அனுப் பப்பட்டவுடன் பரீட்சைகள் திணைக்களம் அப்பயன்பட்ட அறிவித்தலொன்றைச் செய்தித்தாள்களில் வெளியிடும். அறிவித்தலிற் குறிப்பீடு செய்யப்பட்ட பரீட்சைத் திகதிக்கு குறைந்தபட்சம் ஐந்து நாட்களுக்கு முன்னரேனும் தமது பிரவேச அட்டையைப் பெற்றிராத எவரேனும் பரீட்சார்த்தி, விண்ணப்பிக்கப்பட்ட பரீட்சையின் பெயர், அவரது முழுப்பெயர், அவரது தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம், அவரது முகவரி என்பவற்றைச் சரியாகக் கொடுத்துதவி, அவரது அனுமதி அட்டை கிடைக்காமை தொடர்பாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் ஒழுங்கமைப்புக்கள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளையில் விசாரித்தல் வேண்டும். அவர் கொழும்பின் எல்லைகளுக்கு வெளியே வதிபவராயின், தாமதமின்றி அனுமதி அட்டையின் பிரதியொன்றைப் பரீட்சைகள் திணைக்களம் அவருக்கு அனுப்புவதனை இயலச் செய்வதற்கு தொலைநகல் இலக்கமொன்றுடன் சேர்த்தும் தேவைப்பட்ட தகவலைக் கொடுத்தும் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தொலைநகல் இலக்கத்துக்கு முகவரியிடப்பட்ட கோரிக்கைக் கடிதத்தின் மூலம் அத்தகைய விசாரணையை அவர் செய்வது அனுகூலமானதாகவிருக்கும். அத்தகைய விசாரணையைச் செய்கையில் பரீட்சைகள் திணைக்களத்தினால் தேவைப்பட்ட ஏதேனும் மேலதிக தகவலைக் கொடுத்துதவுதனை இயலச் செய்வதற்கு அவரினால் அனுப்பப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியையும் பரீட்சைக் கட்டணத்தின் கொடுப்பனவின் மீது வழங்கப் பட்ட பற்றுச்சீட்டின் பிரதியையும், விண்ணப்பத்தைப்

பதிவுசெய்வதில் வழங்கப்பட்ட பதிவுசெய்யப்பட்ட அஞ்சற் பொருள் பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியையும் அவர் வசம் உடனடியாகக் கிடைக்கக்கூடியனவாக வைத்திருத்தலும் அனுகூலமானதாகவிருக்கும்.

(viii) பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சட்டவரைஞரின் அங்கீகாரத்தின் மீது பரீட்சையைப் பிற்போடுவதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளார்.

(ix) பரீட்சையை நடாத்துவதற்காகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட விதிகளுக்குப் பரீட்சார்த்திகள் அமைந்தோராகவுள்ளனர். அத்தகைய விதிகள் மீறப்படின் அவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டனைக்கு உட்பட்டவராகவிருப்பார்.

(x) **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.**- ஒவ்வொரு பரீட்சார்த்தியும் அவரது ஆளடையாளத்தைப் பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் எண்பித்தல் வேண்டும். பின்வரும் ஆவணங்களுள் ஒன்று மட்டுமே இந்நோக்கத்துக்காக ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்களைப் பதிவுசெய்தல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ; அல்லது
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

(xi) **குறிப்பு** :-

(அ) எந்த ஆவணமோ அல்லது அதன் பிரதியோ விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதலாகாது.
(ஆ) இயைபான ஆவணங்களின் மூலப்பிரதிகளைக் கோரப்படும்போது காண்பிக்கத் தவறுகின்ற பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் அல்லது அரச கூட்டுத்தாபனங்களில் தற்போது தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள பரீட்சார்த்திகள் அவர்களின் முறையான திணைக்களங்களின் அல்லது நிறுவனங்களின் தலைவர்களினூடாகத் தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பிரவேச அட்டையிலுள்ள அவரது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துவிப்பது வலுக்கட்டாய மானது. ஒரு நிறுவனத்தினூடாகப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தியொருவர் இயைபான நிறுவனத்தின் தலைவரினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் அவரது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துவித்தல் வேண்டும். ஏனைய பரீட்சார்த்திகள் தமது கையொப்பங்களை ஓர் அரசாங்கப் பாடசாலையின் அதிபர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, ஆயுதந்தாங்கிய படைகளின் ஆணைபெற்ற அலுவலர், அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவி வகிக்கின்றவரும் ஆண்டொன்றுக்கு 2,40,360 ரூபாவான அல்லது அதற்கு மேற்பட்டதான திரட்டிய சம்பளத்தைப் பெறுகின்றவருமான பதவிநிலை அலுவலர், ஒரு பௌத்த கோயிலின் விகாராதிபதி அல்லது பிரதான மதகுரு அல்லது மதகுருவாக குறிப்பிடத்தக்க பதவியை வகிக்கின்றவரும் வேறேதேனும் மதத்துக்குரிய மத ஸ்தலத்துக்குப் பொறுப்பாகவிருக்கின்றவருமான ஆளொருவர் என்போர் மூலம் அத்தாட்சிப்படுத்துவித்தல் வேண்டும்.

(xii) **பொய்யான தகவலை வழங்கியமைக்கான தண்டனை.**- தேவைப்பட்ட தகைமைகள் பரீட்சார்த்திக்கு இல்லையென தெரியவரின், அவரது பரீட்சார்த்த உரிமையானது பரீட்சைக்கு முன்னரோ, அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்நேரத்திலுமோ இரத்துச் செய்யப்படுவதற்கு உட்படலாம்.

பரீட்சார்த்தியொருவர், பொய்யானதென அறிந்திருந்த ஏதேனும் பொய்யான விடயத்தைக் கொடுத்துதவியுள்ளார் அல்லது அவர் முக்கியமான ஏதேனும் விடயத்தை வேண்டுமென்று மறைத்திருந்தார் என வெளியாகினால், அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாகலாம்.

7. **பெறுபேறுகளை வெளிப்படுத்துதல்.**- பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அஞ்சலின் மூலம் அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தின் மூலம் பரீட்சார்த்திகளுக்குப் பெறுபேறுகளை நேரடியாக வழங்குவார்.

8. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறைசார் விதிகளும், அரசாங்க சேவை தொடர்பாகக் காலத்துக்குக்காலம் வழங்கப்பட்ட சுற்றறிக்கைகளும் மற்றும் தொடர்புபட்ட சேவைக் குறிப்புக்களும் அவற்றுக்கான திருத்தங்களும் இப்பதவிக்கு ஏற்புடையனவாகும்.

9. இவ்வறிவித்தலில் குறித்துரைக்கப்படாத ஏதேனும் விடயம் பற்றி சட்டவரைஞர் முடிவு செய்வார்.

10. வெற்றிடங்களை நிரப்புவதற்கான அல்லது நிரப்பாது விடுவதற்கான அல்லது வெற்றிடங்களின் பகுதியை நிரப்புவதற்கான இறுதி முடிபு சட்டவரைஞரைச் சார்ந்ததாதல் வேண்டும்.

11. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை அல்லது இசைவின்மை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

டீ. எஸ். எச். குமாரஜீவ,
சட்டவரைஞர்.

சட்டவரைஞர் திணைக்களம்,
நீதிமன்ற மாவத்தை,
கொழும்பு 12,
2016, பெப்புருவரி 1.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சட்டவரைஞர் திணைக்களத்தில் மொழிபெயர்ப்பாளர் பதவிகளிலான வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை - 2016**

1. விண்ணப்பிக்கும் பதவி : [ ]

ஆங்கிலம்/சிங்களம் மொழிபெயர்ப்பாளர் - 1
ஆங்கிலம்/தமிழ் மொழிபெயர்ப்பாளர் - 2 [ ]
(இயைபான இலக்கத்தைக் கூட்டில் எழுதவும்)

2. பரீட்சார்த்தி எந்த மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உட்கருதுகின்றார் ? :

சிங்களம் - 2
தமிழ் - 3 [ ]
(இயைபான இலக்கத்தைக் கூட்டில் எழுதவும்)

3. முடிவில் முதலெழுத்துக்களுடன் பெயர் :
   (i) ஆங்கில பெரிய எழுத்துக்களில் :----.
   (உம் : GUNAWARDENA, M.G.B.S. K.)
   (ii) சிங்களத்தில்/தமிழில் :----.

4. முதலெழுத்துக்களினால் குறிக்கப்பட்ட பெயர்கள் :
   (i) ஆங்கில பெரிய எழுத்துக்களில் :----.
   (ii) சிங்களத்தில்/தமிழில் :----.

5. நிரந்தர முகவரி :
   (i) ஆங்கில பெரிய எழுத்துக்களில் :----.
   (ii) சிங்களத்தில்/தமிழில் :----.

6. அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

7. பால் :
   ஆண் - 0
   பெண் - 1
   (இயைபான இலக்கத்தைக் கூட்டில் எழுதவும்)

8. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

9. நீர் இலங்கைப் பிரசையா :
   ஆம் - 1
   இல்லை - 2
   (இயைபான இலக்கத்தைக் கூட்டில் எழுதவும்)

10. பிறந்த திகதி :-

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

11. (i) கல்விசார் தகைமைகள் :----.
   (ii) இரண்டாவது மொழியில் பெறப்பட்ட அதியுச்ச தகைமை : ----.
   (iii) முதலாவது மொழியில் பெறப்பட்ட அதியுச்சத் தகைமை :----. (க. பொ. த. (சாதாரண தர), க. பொ. த. (உயர் தர) பரீட்சைகளின் விடயத்தில் ஆண்டும் பெறப்பட்ட தரங்களும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.).
   (iv) பட்டத் தகைமைகள் :

| பட்டம் | பாடங்கள் | சித்தி (வகுப்பு) | ஆண்டு | பல்கலைக் கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

   (v) சட்டத்தரணி :----.

12. (i) ஏதேனும் தவறுக்காக நீர் சட்ட நீதிமன்றமொன்றில் எப்போதேனும் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா ?

   ஆம்/இல்லை ☐

   ஆம் எனில், விபரங்களைத் தரவும் :----.

   (ii) பரீட்சைக் கட்டணம் :----.
   பற்றுச்சீட்டு இல. :----.
   கொடுப்பனவுத் திகதி :----.
   கொடுப்பனவு எந்த அலுவலகத்தில் செய்யப்பட்டது ? :----.

கழராதவகையில் பற்றுச்சீட்டை இங்கு உறுதியாக ஒட்டவும்.

13. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் எனது அறிவுக்கெட்டியவரை உண்மையானவையும் செம்மையானவையும் என நான் இத்தால் பயபக்தியுடன் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் அளிக்கப்பட்ட விபரங்கள் நியமனத்துக்கு முன்னர் பொய்யானதென அல்லது பிழையானதெனக் காணப்படின் நான் தகைமையற்றவராக்கப்படுவதற்கு ஆளாவேன் என்றும், நியமனத்துக்குப் பின்னர் பொய்யானதென அல்லது பிழையானதெனக் காணப்படின், இயைபான நடவடிக்கை முறைகளுக்கமைய நட்டஈடின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு நான் ஆளாவேன் என்றும் அறிந்துள்ளேன். பரீட்சை தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட விதிகளுக்கு நான் அமைந்தவராகவுள்ளேன் என்றும் இயைபான பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியதன் மூலம் பெறப்பட்ட பற்றுச்சீட்டை இதில் ஒட்டியுள்ளேன் என்றும் மேலும் கூறுகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

14. (i) விண்ணப்பதாரரின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துதல் :
இவ்விண்ணப்பத்தை அனுப்புகின்ற திரு./திருமதி/செல்வி ..... ............................. (முழுப்பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும் அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் 2016 ஆம் ஆண்டு .......... மாதம் ............ ஆந் திகதியன்று இட்டார் என்றும் இயைபான பரீட்சைக் கட்டணத்தின் கொடுப்பனவின் மீதான பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் நான் இத்தால் அத்தாட்சிப் படுத்துகின்றேன்.

----,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.
(அலுவலக முறையான இலச்சினையைப் பொறிக்கவும்.)

(ii) திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :

விண்ணப்பதாரரினால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்களை நான் பரிசோதனை செய்துள்ளேன் என்றும், சொல்லப்பட்ட விபரங்கள் சரியானவையெனக் காணப்படுகின்றன என்றும், இத்தால் அத்தாட்சிப்படுத்துவதுடன் அவரது செயல் நிறைவேற்றுகை, வருகை மற்றும் நடத்தை திருப்திகரமானவை என்றும் உறுதிப்படுத்துகின்றேன். அவர் மேற்படி பதவிக்குத் தெரிவு செய்யப்படின், அவரை இத்திணைக்களத்தின் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவிப்பெயர் :----.
திகதி :----.
(அலுவலக முறையான இலச்சினையைப் பொறிக்கவும்.)

## ஜெனரல் சேர் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

பட்டதாரி மாணவ பயிலிளவல்நிலை (Cadetships) (ஆண்/பெண்) உத்தியோகத்தர்

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் இரத்மலானை மற்றும் சூரியவெவ தெற்கத்திய வளாகத்தில், பட்டதாரி மாணவ பயிலிளவல் (Cadet) (ஆண்/பெண்) உத்தியோகத்தர்களுக்கான தகைமையுடைய இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 2016, பெப்புருவரி 1 ஆந் திகதி முதல் 2016, மாச்சு 1 ஆந் திகதி வரை கோரப்படுகின்றன.

2. பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பிலான கற்கைகளின் கல்விசார் மற்றும் இராணுவ கூறுகள் ஆகியவற்றை வெற்றிகரமாக முடித்தவர்களுக்கு 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கல்வி நிறுவனச் சட்டம் மற்றும் அதில் மேலும் பின்பு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் ஆகியவற்றினால் பட்டங்கள் வழங்குவதற்கு ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

3. இப்பட்டதாரி மாணவ பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர் பதவிகளுக்கு பிரயோகிக்கத்தக்க பட்டதாரி நிகழ்ச்சித்திட்டங்களில் கீழ்வரும் பாடநெறிகள் பின்வரும் இடங்களில் நடாத்தப்படும்.

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், இரத்மலானை :

* மருத்துவம் மற்றும் சத்திர சிகிச்சையியல் இளமாணி (எம். பி. பி. எஸ்.) பட்டம் (5 ஆண்டுகள்)
* விஞ்ஞான இளமாணி - பொறியியலில் கௌரவப் பட்டம் (4 1/2 ஆண்டுகள்)
* விஞ்ஞான இளமாணி - மென்பொருள் பொறியியலில் கௌரவப் பட்டம் (4 1/2 ஆண்டுகள்)
* விஞ்ஞான இளமாணி - முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானத்தில் பட்டம் (3 ஆண்டுகள்)
* விஞ்ஞான இளமாணி - தேவைகள், விநியோகங்கள் ஒழுங்கமைப்பு முகாமைத்துவத்தில் பட்டம் (3 ஆண்டுகள்)
* விஞ்ஞான இளமாணி - சமூக விஞ்ஞானத்தில் பட்டம் (3 ஆண்டுகள்)

தெற்கு வளாகம், சூரியவெவ :

* விஞ்ஞான இளமாணி - கணிய அளவையியலில் கௌரவப் பட்டம் (4 1/2 ஆண்டுகள்)
* விஞ்ஞான இளமாணி - கணிய அளவையியலில் பட்டம் (3 1/2 ஆண்டுகள்)
* விஞ்ஞான இளமாணி - அளவையியல் விஞ்ஞானத்தில் கௌரவ பட்டம் (4 1/2 ஆண்டுகள்)
* விஞ்ஞான இளமாணி - தகவல் தொழில்நுட்பத்தில் கௌரவப் பட்டம் (4 1/2 ஆண்டுகள்)

3.1 பட்டதாரி பாடநெறிகளுக்காக சேர்த்துக்கொள்ளப்படும் பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்களின் மூன்று படைகளுக்குமான ஒதுக்கீடானது அடிப்படைப் பிரிவுகளில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் தெரிவுக்காக நடாத்தப்படும் பரீட்சைகளில் தேருநர்கள் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக முடித்துக்கொண்ட பின்னர் பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்கள் இலங்கை தரைப்படை, கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவற்றின் கிரமமான படைகளில் இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.

3.2 பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான கற்கைகளின் கல்விசார் மற்றும் இராணுவ கூறுகள் ஆகியவற்றை வெற்றிகரமாக முடிக்கின்ற பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்களுக்கு பிரயோகிக்கத்தக்கவாறு பின்வரும் பட்டமொன்று வழங்கப்படும் :

* மருத்துவம் மற்றும் சத்திர சிகிச்சையியல் இளமாணி (எம். பி. பி. எஸ்.) பட்டம்
* விஞ்ஞான இளமாணி - பொறியியலில் கௌரவப் பட்டம்
* விஞ்ஞான இளமாணி - மென்பொருள் பொறியியலில் கௌரவப் பட்டம்
* விஞ்ஞான இளமாணி - முகாமைத்துவ, தொழில்நுட்ப விஞ்ஞானத்தில் பட்டம்
* விஞ்ஞான இளமாணி - தேவைகள், விநியோகங்கள் ஒழுங்கமைப்பு முகாமைத்துவத்தில் பட்டம்
* விஞ்ஞான இளமாணி - சமூக விஞ்ஞானத்தில் பட்டம்
* விஞ்ஞான இளமாணி - அளவையியல் விஞ்ஞானத்தில் கௌரவ பட்டம்
* விஞ்ஞான இளமாணி - கணிய அளவையியலில் கௌரவப் பட்டம்
* விஞ்ஞான இளமாணி - கணிய அளவையியலில் பட்டம்
* விஞ்ஞான இளமாணி - தகவல் தொழில்நுட்பத்தில் கௌரவப் பட்டம்

3.3 சகல பட்டப்படிப்பு பாடநெறிகளும் ஆங்கில மொழியில் மாத்திரமே நடாத்தப்படும்.

3.4 தெரிவுசெய்யப்படும் தேருநர்கள் அவர்களின் தகைமைகளுக்கேற்ப பின்வரும் இளமாணி பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் ஒன்றைப் பயிலுதல் வேண்டும் :

(அ) மருத்துவம் மற்றும் சத்திர சிகிச்சையியல் இளமாணி (எம். பீ. பீ. எஸ்.) - ஐந்து ஆண்டுகள் (ஆண்/பெண்).- 2015 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான பிரிவில் உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதீகவியல் ஆகிய பாடங்களில் குறைந்தபட்சம் மூன்று சாதாரண (எஸ்) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமை உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

(ஆ) விஞ்ஞான இளமாணி (பி.எஸ்சி.) பொறியியல்சார் கௌரவப் பட்டம்.- விமான இயந்திரவியல்/உயிரியல் மருத்துவம்/ சிவில்/ மின் மற்றும் இலத்திரனியல்/ கடல்சார்/ பொறிமுறையெந்திரவியல்/ எந்திர இலத்திரனியல் - நான்கரை ஆண்டுகள் (ஆண்/பெண்).- 2015 ஆம் ஆண்டு அல்லது 2014 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் (இரசாயனவியல், பௌதீகவியல் மற்றும் இணைந்த கணிதம்)' ஆகியவற்றில் குறைந்தபட்சம் மூன்று சாதாரண (எஸ்) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமை உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

(இ) விஞ்ஞான இளமாணி (பி.எஸ்சி.) மென்பொருள் பொறியியலில் கௌரவப் பட்டம் - (நான்கரை ஆண்டுகள் (ஆண்).- 2015 ஆம் ஆண்டு அல்லது 2014 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் (இணைந்த கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல், உயர் கணிதம், தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம்) ஆகியவற்றில் குறைந்தபட்சம்

மூன்று சாதாரண (எஸ்) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமை உடையவர்கள் விண்ணப் பிக்க முடியும்.

(ஈ) விஞ்ஞான இளமாணி (பி.எஸ்சி.) முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானத்தில் பட்டம் - (மூன்று ஆண்டுகள் (ஆண்).- 2015 ஆம் ஆண்டு அல்லது 2014 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம் அல்லது கணிதப் பிரிவில் குறைந்தபட்சம் மூன்று சாதாரண (எஸ்) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமை உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

(உ) விஞ்ஞான இளமாணி (பி.எஸ்சி.) தேவைகள் விநியோகங்கள் ஒழுங்கமைப்பு முகாமைத்துவத்தில் பட்டம் - மூன்று ஆண்டுகள் (ஆண்/ பெண்).- 2015 ஆம் ஆண்டு அல்லது 2014 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம், கணிதம் அல்லது வர்த்தகப் பிரிவில் குறைந்தபட்சம் மூன்று சாதாரண (எஸ்) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமை உடையவர்கள் விண்ணப் பிக்க முடியும்.

(ஊ) விஞ்ஞான இளமாணி (பி.எஸ்சி.) சமூக விஞ்ஞா னத்தில் பட்டம் - மூன்று ஆண்டுகள் (ஆண்/பெண்).- 2015 ஆம் ஆண்டு அல்லது 2014 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஏதாவது பாடப்பிரிவில் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண (எஸ்) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமை உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

(எ) விஞ்ஞான இளமாணி (பி.எஸ்சி.) அளவையியல் விஞ்ஞானத்தில் கௌரவப் பட்டம் - நான்கரை ஆண்டுகள் (ஆண்/ பெண்).- 2015 ஆம் ஆண்டு அல்லது 2014 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பௌதிகவியல், இணைந்த கணிதம் ஆகியவற்றுடன் மற்றும் ஏதாவது பாடமொன்றில் குறைந்தபட்சம் மூன்று சாதாரண (எஸ்) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமை உடைய வர்கள் விண்ணப்பிக்க முடியும்.

(ஏ) விஞ்ஞான இளமாணி (பி.எஸ்சி.) கணிய அளவை யியலில் கௌரவப் பட்டம் - நான்கரைஆண்டுகள் (ஆண்/பெண்),

விஞ்ஞான இளமாணி (பி.எஸ்.சி.) கணிய அளவை யியலில் பட்டம் மூன்றறை ஆண்டுகள் (ஆண்) - 2015 ஆம் ஆண்டு அல்லது 2014 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பின்வரும் பாடங் களுள் மூன்று பாடங்களில் குறைந்தபட்சம் மூன்று சாதாரண (எஸ்) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமை உடையவர்கள் விண்ணப் பிக்க முடியும்.

பின்வரும் பாடங்களில் ஆகக்குறைந்தது ஏதாவது ஒரு பாடத்திலும் :

இணைந்த கணிதம்/உயர் கணிதம் ;
அத்துடன் கீழே குறிப்பிடப்படும் அட்டவணையிலிருந்து ஏனைய பாடத்தில்/பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும் :

கணக்கியல்/ பொருளியல்/ வணிகப் புள்ளி விபரவியல்/வியாபாரக் கற்கைகள்/பௌதிக வியல்/இரசாயனவியல்/தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம்

இதற்கு மேலதிகமாக விண்ணப்பதாரிகள் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கீழே குறிப்பிடப்படும் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

(அ) கணிதம் I அல்லது II பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச் சித்தி (C) சித்தியொன்று

(ஆ) விஞ்ஞானம் I அல்லது II பாடத்தில் குறைந்தபட்சம் சாதாரண (எஸ்) சித்தியொன்று

(ஒ) விஞ்ஞான இளமாணி (பீ.எஸ்சி.) தகவல் தொழில்நுட்ப கௌரவ பட்டம் - நான்கரை ஆண்டுகள் (ஆண்).- 2015 ஆம் ஆண்டு அல்லது 2014 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஏதாவதொரு பாடப் பிரிவில் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண (S) சித்தி யுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமை உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

3.5 தெரிவுசெய்யப்பட்ட பயிலிளவல் (ஆண்/ பெண்) உத்தி யோகத்தர்கள் அப்பாடநெறிகளுக்குரிய பொதுவான பாடங்களுக்கு மேலதிகமாக அந்தந்த பாடநெறிகளுக்கு பிரயோகிக்கத்தக்கதாக ஆங்கிலம், முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், சட்டம், சர்வதேச கற்கைகள் மற்றும் இராணுவ கற்கைகள் பாடங்களை கட்டாயமாக பின்பற்றுதல் வேண்டும்.

3.6 இவற்றுக்கு மேலதிகமாக தமது பட்ட நிகழ்ச்சித் திட்டத் தின்போது, பௌதிக அபிவிருத்தி, தேகாப்பியாசம், ஆயுதப் பயிற்சி மற்றும் தலைமைத்துவம் ஆகியவற்றில் தொடர்ச்சியான பயிற்சியை மேற்கொள்ளுவதற்கும் அவர்கள் வேண்டப்படுவர்.

4. பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர் பதவிக்குத் தேவையான ஏனைய தகைமைகள் :

தேருநர்கள் :

(அ) இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) 2016, மாச்சு 1 ஆந் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 22 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

கல்வித் தகைமைகள் :

(இ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சம்பந்தப்பட்ட பாடப்பிரிவில் மூன்று பாடங்களில் குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமை யுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

அத்துடன்

(i) சாதாரண பொதுப் பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும் ;

(ii) ஏனைய பட்ட நிகழ்ச்சிகளுக்கு க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்திற்கு குறைந்தபட்சம் திறமைச் சித்தியை (C) பெற்றிருத்தல் வேண்டும்.

(ஈ) குறைந்தபட்சம் பின்வரும் பௌதிக நியமங்களைத் திருப்திப்படுத்துதல் வேண்டும் :

| | | ஆண் | பெண் |
|---|---|---|---|
| உயரம் | தரைப்படை | 5'6" | 5'3" |
| | கடற்படை | 5'6" | 5'3" |
| | விமானப்படை | 5'6" | 5'4" |
| நிறை | தரைப்படை | 50 கி. கி. | - |
| | கடற்படை | 52 கி. கி. | 41 கி. கி. |
| | விமானப்படை | 17 <BMI< 25 | 17 <BMI< 25 |
| மார்பளவு | | 32" (விரியாத) | - |

**குறிப்பு**.- விளையாட்டுத் துறையில் அல்லது அத்தகைய வேறு செயற்பாடுகளில் தேசிய மட்டத்திலான சாதனைகளைத் தேருநர் கொண்டிருந்தால், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக முகாமைத்துவச் சபையின் தலைவர் ஆகியோரினால் மேற்படி பௌதிக நியமங்கள் தளர்த்தப்படலாம்.

(உ) அவசியப்படும் மருத்துவ நியமங்களுக்கு இணங்குதல்.- பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக முகாமைத்துவச் சபையின் தலைவர் ஆகியோர்களது திருப்திக்கு ஏற்ப வேண்டப்படுத்தப்பட்ட மாதிரிக்கமைய மருத்துவப் பிரகடனப் படிவத்தை சமர்ப்பித்ததன் பின்னர் மருத்துவ சோதனையில் சித்தியடையுமாறு வெற்றிகரமான தேருநர்கள் வேண்டப்படுவர். விண்ணப்பதாரியொருவர் மருத்துப் பிரகடனப் படிவத்தில் பொய்யான தகவல்களை அளித்துள்ளார் எனத் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பு தெரியவந்தால் குறிப்பிட்ட விண்ணப்பப்படிவத்தில் பொய்யான தகவல்களை வழங்கியமை தொடர்பில் அத்தகைய விண்ணப்பதாரிகள் நீக்குதல் நடவடிக்கைக்கு உள்ளாவர்.

(மருத்துவ உறுதிமொழிப் படிவம் பல்கலைக்கழக இணையத்தளத்தில் www.kdu.ac.lk இருந்து பெற்றுக்கொள்ளப்படலாம்.)

(ஊ) திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (பயிற்சியின் கீழ் உள்ள காலப்பகுதியில் திருமணம் செய்வதற்கும் அத்துடன் படை ஒழுங்குவிதிகளின் கீழ் அவ்வாறு செய்வதற்கு அனுமதி அளிக்கப்படும் வரையும் பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்கள் திருமணம் செய்வதற்கும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.)

4. **சேவை நிபந்தனைகள்**.- ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் இரத்மலானை அல்லது சூரியவெவ தெற்கத்திய வளாக பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்களாக தெரிவுசெய்யப்பட்ட தேருநர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். அவர்கள் 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கல்வி நிறுவனச் சட்டம் மற்றும் அதில் மேலும் பின்தொடரப்பட்ட திருத்தங்கள் ஆகியவற்றின்கீழ் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகள் ஆகியவற்றுக்கு உட்படுவார்கள். சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகள் கிரமமான படைகளில் இணைப்புச் செய்யப்பட்ட மற்றும் சம்பந்தப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட திகதியிலிருந்து தொடர்ச்சியானதும் இடையறாததுமான 12 வருடங்களுக்குக் குறையாத கட்டாயமான காலப்பகுதி சேவையாற்றுதல் வேண்டும்.

5. தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளை சேர்த்துக்கொள்ளும் நேரத்தில், சம்பந்தப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் பட்டத்தைப் பெற்ற பின்னர் அவர்கள் பதவிக்கு அமர்த்தப்பட்ட படையில் இணைப்புச் செய்யப்பட்ட பின்னர், பிரயோகிக்கத்தக்கவாறு கட்டாயமான காலமொன்றுக்கு சேவையாற்றுவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுடன் ஒப்பந்தமொன்றையும் உடன்படிக்கையொன்றையும் செய்துகொள்ளல் வேண்டும்.

6. பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்களுக்கு மாதமொன்றுக்கு அண்ணளவாக ரூபா 38,000 கொண்ட சம்பளமும் படியும் கொடுக்கப்படும். இதற்கு மேலதிகமாக, கட்டணமின்றி பின்வரும் வசதிகளைப் பெற்றுக்கொள்ளலாம் :-

(i) உணவு மற்றும் தங்குமிடம்
(ii) சீருடைகள்
(iii) அதிகாரியின் வேலையாள் வசதிகள்
(iv) விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள்
(v) மருத்துவ வசதிகள்

7. இலங்கைத் தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் கிரமமான படைகளுக்கு இணைப்புச் செய்யப்பட்டதன் மீது, சேவைக் கொடுப்பனவு சட்டக்கோவையின் பிரகாரம் வரிசைப் பதவிக்கு பிரயோகிக்கத்தக்க சம்பளமும் படியும் அவர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படும் :

(அ) பின்வரும் படிகள் மாதாந்தம் கொடுப்பனவு செய்யப்படும் :

(i) தகைமைப்படி
(ii) பங்கீட்டுப்படி
(iii) "உள்ளே வாழுமாறு" கட்டளையிடப்பட்டவர்களுக்கான படி (திருமணமான அலுவலர்களுக்கு மட்டும்)
(iv) சீருடைப் பராமரிப்புப்படி

(ஆ) பின்வரும் வசதிகள் வழங்கப்படும்/படிகள் கொடுப்பனவு செய்யப்படும் :

(i) "உள்ளே வாழுமாறு" கட்டளையிடும்போது இலவச தங்குமிட வசதி
(ii) வாடகை வீட்டில் வசிப்பதாயின் வரையறுக்கப்பட்ட வாடகைப்படி
(iii) சீருடைப்படி
(iv) அதிகாரியின் வேலையாள் படி

8. அவர்களது சம்பள எதிர்நோக்கல்கள் மற்றும் சேவை நிபந்தனைகள் தொடர்பில் பின்வரும் ஒழுங்குவிதிகளினால் தரைப்படை/ கடற்படை/ விமானப் படையின் உத்தியோகத்தர்கள் ஆட்சிப்படுத்தப்படுவார்கள் :-

(i) தரைப்படை/கடற்படை/விமானப்படையின் வேதன சட்டக் கோவை
(ii) இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தரைப் படை/கடற்படை/விமானப்படை உத்தியோகத்தர்களுக்கான நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகள்
(iii) இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தரைப்படை/ கடற்படை/ விமானப்படையின் நடைமுறையிலான ஓய்வூதியங்கள் மற்றும் பணிக்கொடைகள் சட்டக் கோவை

9. பயிற்சியின்போது ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் சூரியவெவ தெற்கத்திய வளாக

உப வேந்தரினாலும் அத்துடன்/ அல்லது சம்பந்தப்பட்ட படைத் தளபதிகளாலும் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய பயிற்சியை மேற்கொள்வதற்கு பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்கள் வேண்டப்படுத்தப்படுவர்.

10. பயிற்சியின் கீழுள்ள பயிலிளவல் (Cadet) அலுவலர்கள் இலங்கையின் அல்லது வெளிநாட்டின் ஏதாவது ஒரு பகுதிக்கு பயிற்சிக்காக அனுப்பப்படுவதற்கு பாத்திரவாளியாவார்கள்.

11. பயிற்சிபெறும் பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்கள் உள்ளே வாழுமாறும் வழங்கப்பட்ட இடவசதியில் வாழுமாறும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தினால் அல்லது சம்பந்தப்பட்ட படைத் தாபனங்களினால் முன்வைக்கப்பட்ட வழக்கமான வேலை முறையைப் பின்பற்றுமாறும் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

12. **மொழித் தேவைப்பாடுகள்**.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மொழிக் கொள்கையை அமுல்படுத்துவதற்காக ஏற்கனவே செய்யப்பட்ட அல்லது இதன் பின்னர் செய்யப்படும் ஏதாவது சட்ட ஒழுங்குவிதிகளுடன் இணங்குமாறு தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

13. **ஆளடையாளத்தை நிரூபித்தல்**.- விண்ணப்பதாரிகள் தமது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கான சான்றினைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுவார்கள். இந்நோக்கத்திற்கு ஆட்கள் பதிவுத் திணைக் களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது தபால் மா அதிபரினால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை அல்லது மோட்டார் வாகனங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்டுள்ள மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

14. விண்ணப்பங்கள் இப்பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தில் இருந்து இதற்குரிய விண்ணப்பப்படிவத்தை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இணையத்தளம் www.kdu.ac.lk

15. சரியாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை அனுப்பும்போது, "உப வேந்தர், ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்" சார்பில் இலங்கை வங்கி, மொறட்டுவை-இடம கிளையின் நடைமுறைக் கணக்கு இலக்கம் "9405831" இற்கு வரவு வைக்கப்படுவதற்காக இலங்கை வங்கியின் ஏதாவது ஒரு கிளைக்கு ரூபா 1,000 ஐ (ஆயிரம் ரூபா) தொகையினை கொடுப்பனவு செய்வதன் மூலம் தாங்களுக்கு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். அடிப்படை தகைமையற்ற விண்ணப்பங்கள் மற்றும் சரிவரி நிரப்பப்படாத அல்லது இத்தகவலின் நிபந்தனைகளின் பிரகாரம் இல்லாததுமான விண்ணப்பங்கள் அறிவித்தலேதுமின்றி நிராகரிக்கப்படுவதுடன், அவ்விண்ணப்பக் கட்டணங்கள் மீளளிப்புச் செய்யப்படவும் மாட்டாது. உப வேந்தர் அவர்களால் நியமனம் செய்யப்படும் தெரிவுக்குழுவினால் தீர்மானிக்கப்படும் நியதிகளுக்கு இணங்க, மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளை பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கிடையே பூர்வாங்க தெரிவுகள் இடம்பெறுவதுடன், அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் ஆரம்ப நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

16. சரியாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2016, மாச்சு 1 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் "பதிவாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், இரத்மலானை" எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது மேல் மூலையின் மீது "பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தருக்கான விண்ணப்பம்" மற்றும் விண்ணப்பித்துள்ள கற்கைப் பிரிவு என்ப வற்றையும் குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப் பங்களும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்காத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

17. அரசாங்க அல்லது கூட்டுத்தாபனங்களில் தொழில் புரியும் ஊழியர்கள் தங்களது விண்ணப்பங்களை திணைக்கள/ கூட்டுத் தாபன தலைவரின் ஊடாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், அவ்விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் குறிப்பிட்ட பதவியிலிருந்து விடுவிப்புச் செய்ய முடியும் என்பதையும் குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைவரிடமிருந்து உறுதிக் கடிதம் ஒன்றையும் வழங்குதல் வேண்டும்.

18. பிறப்புப் பதிவுச் சான்றிதழ், க. பொ. த. (சா. த.) மற்றும் க. பொ. த. (உ. த.) பெறுபேற்றுத் தாள்கள் மற்றும் பல்கலைக்கழக அனுமதி தகுதிக்கான பெறுபேற்றுத்தாள் ஆகிய ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை மாத்திரம் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பிவைத்தல் வேண்டும்.

19. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ சபையினால் நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்டவாறு மதிப்பாய்வு மூலப் பிரமாணத்தின் பிரகாரம் தேவையான தரங்களைக் கொண்டுள்ள தேருநர்கள் மத்தியிலிருந்து பூர்வாங்க தெரிவுகள் இடம்பெறும். இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட தேருநர்கள் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ சபையினால் அவசியமெனத் தீர்மானிக்கப்படுகின்ற வேறு சோதனைகளில் பங்கு பற்றுமாறு வேண்டிக்கொள்ளப்படுவார்கள்.

20. நேர்முகப் பரீட்சைகளுக்கும் ஏனைய சோதனைகளுக்கும் தெரிவுசெய்யப்படும் தேருநர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சை களின் இடங்கள், நேரங்கள் மற்றும் திகதிகள் ஆகியன எழுத்தில் அறிவிக்கப்படும். இந்நோக்கத்திற்காக விண்ணப்பதாரிகளுக்கு ஏற்படக்கூடிய பிரயாண அல்லது வேறு செலவினங்கள் இப்பல்கலைக் கழகத்தினால் கொடுப்பனவு செய்யப்பட மாட்டாது.

21. விண்ணப்பதாரி ஒருவரை சிபாரிசு செய்வதற்கு யாரேனும் ஒருவர் விரும்பினால், அவருக்கு நற்சான்றிதழ் வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். **விண்ணப்பதாரி ஒருவரை தெரிவுசெய்வதற்காக எவ்வழியிலேனும் தூண்டுதல் அல்லது தாக்கத்தை ஏற்படுத்த முயற்சித்தல் அவ்விண்ணப்பதாரிக்கான தகைமையீனமாகக் கருதப் படும்**.

22. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி இப்பல்கலைக்கழகத்தினால் அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் நிராகரிப்பு பற்றிய கடிதத் தொடர்பு அல்லது விசாரணைகள் வரவேற்கப்பட மாட்டாது.

23. வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் தமிழ் மொழிக்கும் சிங்கள மொழிக்கும் இடையே ஏதேனும் பரஸ்பர வேறுபாடுகள் ஏற்படின், சிங்கள மொழி மூலமான வர்த்தமானி அறிவித்தலைப் பின்பற்றுமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்.

கருணாசேன ஹெட்டிஆரச்சி,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு மற்றும்
முகாமைத்துவ சபையின் தலைவர்,
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல
பாதுகாப்பு பல்லைக்கழகம்.

2-699